# தேசிய போட்டி முறையிலான கேள்வி அழைப்பு

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

## கேள்வி இல. EPD/F08/02/2024

# 2025ஆம் வருடத்திற்கான பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிடல்

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவின் தலைவர் சார்பில் கல்வி வெளியீட்டு ஆணையாளரால் 2025ஆம் வருடத்திற்குத் தேவையான பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிட்டு உரிய களஞ்சியசாலைகளுக்கு வழங்குவதற்காக தகைமை வாய்ந்த அச்சகத்தாரிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. இக்கேள்வி கோரல்களுக்கு உரிய அனைத்து புத்தகங்களும் ஓப்செட் அச்சு முறையில் மட்டும் அச்சிடப்படல் வேண்டும் என்பதால் கடந்த 05 வருடங்களில் ஓப்செட் அச்சு இயந்திரங்களைக் கொண்ட அச்சகத் துறையில் 03 வருட அனுபவம் மற்றும் ஓப்செட் அச்சு நடவடிக்கைகளில் குறைந்த பட்சம் 02 வருடமாவது அனுபவம் கொண்ட அச்சக உரிமையாளர்கள் மட்டும் இதற்காக முன்வரல் வேண்டும்.

03. கடந்த 02 வருடங்களில் ஒரு வருடத்திலாவது கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் அச்சுக் கட்டளையைப் பெற்று ஒப்பந்தமொன்றுக்கு உடன்பட்டு அவ்வொப்பந்தத்தின்படி பாடப் புத்தகங்களை அச்சிட்டு ஒப்படைக்காத அச்சகர்கள் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர்களாவர்.

04. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

   I. 100,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்துக்கு செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு.

   II. அரசாங்கத் திணைக்களமொன்றாக அச்சு வேலைகளைச் செய்யும் நிறுவனம் மற்றும் பாராளுமன்றச் சட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அச்சு வேலைகளைச் செய்யும் நிறவனங்கள் தவிர்ந்த ஏனைய கேள்விதாரர்கள் வியாபாரத்தின் பொதுத் தன்மையை அச்சகமாகத் தெரிவிக்கும் பதிவாளர் / மாகாண கம்பனிகள் பதிவாளர் / பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சமாதான நீதவான் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி.

   III. 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கைச் சட்டத்தின் 6வது அத்தியாயத்தின் பிரகாரம் ஒப்பந்ததாரர் அல்லது அவர் சார்பில் இணை பிரேரணையாளர், உப பிரேரணையாளர், பிரதிநிதியொருவர் பெயர் குறிப்பிடப்படுபவராக பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

   IV. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் போது ஓப்செட் அச்சு இயந்திரத்துடன் செயற்படும் நிலையிலுள்ள அச்சகமொன்று நிறுவனத்துக்கு உரித்துடையதாக உள்ளதென்பதற்கு அச்சகம் அமைந்துள்ள பிரதேச செயலாளரிடம் பெற்றுக்கொண்ட சான்றிதழ்.

   V. அச்சக சட்ட விதியின் 2(1) பிரிவின் பிரகாரம் மஜிஸ்திரேட் ஒருவரின் முன்னிலையில் செய்துகொள்ளப்பட்ட பிரகடனத்தின் சமாதான நீதவான் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி.

05. பத்தரமுல்ல, பெலவத்த, ''இசுறுபாய''வின் 6ஆம் மாடியில் அமைந்துள்ள கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் கேள்வி ஆவணங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

06. கேள்வி ஆவணங்களை 2024-06-28ஆம் திகதி முதல் 2024-07-18ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பத்தரமுல்ல, பெலவத்த, ''இசுறுபாய''வின் 6ஆம் மாடியில் அமைந்துள்ள கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிதிப் பிரிவின் தலைமைக் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம். இதன்பொருட்டு மேலே 04ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. முத்திரை பொறிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024-07-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பத்தரமுல்லை, பெலவத்தை, ''இசுறுபாய'', 6ஆம் மாடியில் அமைந்துள்ள கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தலைமைக் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது அத்தினத்திற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், அமைச்சுக் கேள்விச் சபை, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், "இசுறுபாய", பெலவத்த, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2025ஆம் வருடத்திற்கான பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிடல்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். 2024-07-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

08. மேற்குறிப்பிட்ட முகவரியில் அமைந்துள்ள கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் 2024-06-28ஆம் திகதி முதல் 2024-07-18ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

09. கேள்விகளைச் சமர்ப்பிப்பவர்களுக்கு எழும் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு கேள்விகளைச் சமர்ப்பிப்பவர்களுக்கான கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2024-07-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் கல்வி வெளியீட்டு ஆணையாளரினால் நடாத்தப்படும்.

10. கேள்விகளைச் சமர்ப்பிப்பவர்களினால் கேள்வி ஆவணங்களின் ixஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கேள்விப் படிவத்துடன் கேள்விப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. கேள்வியின் செல்லுபடிக் காலம் கேள்வி திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்களாகும். அதாவது 2024-10-16ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

12. மேலதிக விபரங்களை கீழே குறிப்பிட்டுள்ளவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| தொலைபேசி இல. | கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் | - 011-2784815 |
| | தலைமைக் கணக்காளர் | - 011-2787515 |

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,**
**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,**
**6ஆம் மாடி, ''இசுறுபாய'',**
**பெலவத்த, பத்தரமுல்ல.**

2024-06-28.